RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI:10.34256/irjt22s133

OPEN ACCESS

# புறநானூற்றில் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும்

**நா. ரெங்கலட்சுமி [அ, *]**

[அ] தமிழ்த்துறை, எஸ். இராமசாமிநாயுடு ஞாபகார்த்தக் கல்லூரி, சாத்தூர்-626203, தமிழ்நாடு, இந்தியா.

# Habits and Beliefs in the Purananuru

**N. Rengalakshmi [a, *]**

[a] Department of Tamil, Sri Ramasamy Naidu Memorial College, Sattur-626203, Tamil Nadu, India.

* Corresponding Author: rengaveeru@gmail.com

Received: 24-03-2021
Revised: 27-01-2022
Accepted: 31-01-2022
Published: 26-02-2022

Check for updates

**ABSTRACT**

Contemporary literature tends to explain people culture. Purananuru of them are set to express the culture of the people. The semantic elements of cultural anthropology include the semantic culture. Materialistic cultures include customs, beliefs, and rituals. Habits are formed by the individual and the organization of society. Habits appear based on people's need. They are routinely accepted by society. So in the course of the day, both habit and habit together become habit. The beliefs of the community were able to declare the cultural heritage of the community. Beliefs are formed by people and followed in society and they appear to be based on social needs and goals. Material cultural elements include customs and beliefs. The article sets out to fit the customs and beliefs in them into Purananuru songs.

**Keywords:** Purananuru, Belief, Habits, Sangam literature, Cultural elements.

## முன்னுரை

பழக்கவழக்கங்களை தனிமனிதனும் சமுதாயம் என்ற அமைப்பும் இணைந்து உருவாக்குகின்றன. மக்களின் தேவை அடிப்படையிலேயே பழக்கங்கள் தோன்றுகின்றன. அவை சமுதாயத்தால் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற நிலையில் வழக்கங்களாக உருப்பெறுகின்றன. எனவே நாளடைவில் பழக்கம், வழக்கம் என்ற இரண்டும் சேர்ந்து பழக்கவழக்கம் என்றாகிறது. சமூகத்தின் பண்பாட்டு மரபினை அறிவிக்க வல்லன அச்சமுதாயத்தின் நம்பிக்கைகள். நம்பிக்கைகள் மக்களால் உருவாக்கப்பட்டுச் சமுதாயத்தில் பின்பற்றப்படுவன அவை சமூகத் தேவைகள் மற்றும் குறிக்கோள்களின் அடிப்படையில் தோன்றின. பொருள்சாராப் பண்பாட்டுக் கூறுகளில் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும் அடங்கும். இவ்விரண்டையும் புறநானூற்றில் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

## பழக்கம்

பழக்கம் என்பது ஒரு கற்கும் செயலாகும். இது தனிமனிதனிடம் இயல்பாக வந்தமைந்த நடத்தையைக் குறிப்பதாகும். பழக்கம் வளர்ச்சிக்கு இன்றியமையாத கூறாகக் கருதப்படுகிறது. நனவுடன் தொடங்கிய செயல் நாளடைவில் நனவின்றியே நிகழக் கூடியதாக ஆகிவிடும் செயலையே பழக்கம் என்பர் (Gandhi, 2003).

பழக்கம் என்ற சொல் பழகுதல் அல்லது பயிற்சியாதல் என்ற பொருளில் தமிழிலக்கியத்தில் பண்டுதொட்டே ஆட்சிபெற்று வந்துள்ளது எனலாம்;.

## வழக்கம்

பழக்கத்தின் தொடர்ந்த நிலையே வழக்கமாகும். வழக்கம் சமூகம் சார்ந்த ஒன்றாகும். ஒரு இனத்தின் ஒரு சிறு பகுதியைச் சார்ந்தோரோ அல்லது சில நாடு மட்டுமோ செயல்களை ஒழுங்காகச் செய்து வருவதையே வழக்கம் என்று கூறுகிறோம் (Gandhi, 2003).

தனிமனித வழக்கங்களே காலப்போக்கில் சமுதாய வழக்கங்களாக உருபெற்றுத் தலைமுறை தலைமுறையாக பின்பற்றப்படுகிறது எனலாம்.

## பழக்கவழக்கங்கள்

'பழக்கம்' என்ற சொல்லில் பழகு என்பது வேர்ச்சொல். "பழக்கம் என்பதற்கு பயிற்சி, வழக்கம்" என்று நர்மதாவின் தமிழ்அகராதி பொருள் விளக்கம் தருகிறது. தொடர்ந்து நடைபெறும் செயல் நாளடைவில் பழக்கமாகிறது. பழக்கத்தின் வளர்ச்சி நிலையினை 'வழக்கம்' என்பர். வழக்கம் என்பதற்கு சம்பிராதயம், நடைமுறை என்ற பொருள் உண்டு. பின்னர் நாளடைவில் இரண்டையும் சேர்த்து பழக்கவழக்கங்கள் என்று அழைக்கப்படுகிறது. புறநானூற்றுப் பாடலிலும் சங்ககாலப் பழக்கவழக்கங்கள் பதிவு செய்யப்பட்டு உள்ளமையை அறியமுடிகிறது. இப்பழக்கவழக்கங்களை,

1. விழா நாள் மரபுகள்
2. போரில் பெருஞ்சோறு வழங்குதல்
3. வீரம் தொடர்பான பழக்கவழக்கங்கள்
4. போர்க்கான பழக்கவழக்கங்கள்
5. அரசுரிமைக்கான போர்

என்ற அடிப்படையில் ஆராய இயலுகின்றது.

## விழா நாள் மரபுகள்

விழா நாளில் மக்கள் தொழிலாற்றுவதில்லை என்பதும் மன்னர் சிறைப்பட்ட கைதிகளை விடுவிப்பதும் மற்றும் இரவலர்க்கு பரிசளித்தலை வழக்கமாகக் கொண்டிருந்தமையையும் இலக்கியச் சான்றுகள் உணர்த்துகின்றன. விழாவில் முழவு, யாழ், முரசு, குழல் ஆகிய இசைக்கருவிகள் முழக்கப்பட்டன. இவ்வோசை விழாக்காலத்தில் இடைவிடாமல் ஒலித்துக் கொண்டிருந்ததாகப் புறநானூற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. விழாநாளில் ஊர்மக்கள் இரவில் உறங்குவதில்லை என்ற குறிப்புக் காணக் கிடைக்கின்றது. அந்நாளில் உணவும் சிறப்புடையதான ஊன், கள் ஆகியவற்றை வழங்கியிருக்கின்றனர்.

"தனி மகன் வழங்காப் பனி மலர்க் காவின்

ஒதுக்குஇன் திணி மணற் புதுப் பூம் பள்ளி

வாயில் மாடந்தோறும் மை விடை வீழ்ப்ப

நீஆங்குக் கொண்ட விழவினும் பலவே

என்ற பாடலடிகள் விழாவில் ஊன் வழங்கியதை விளக்குகின்றன (Swaminatha Iyer, 2014).

## விழாவும் கலையும்

கலைகள் விழாக்களால் வளர்க்கப்படுகின்றன. மக்கள் அவர்களின் தொழில்களில் கிடைத்த பொருட்களையும், தொழில்வயப்பட்ட கலைகளையும் விழாக்காலங்களில் படைக்கின்றனர். புறநானூறு இரவலர்களான கூத்தர், பாணர், பொருநர் ஆகியோர் விழாக்கள் நிகழும் இடங்களை நாடி அடிக்கடி இடம்பெயர்ந்து சென்ற நிலையினைச் சுட்டுகின்றது.

“ஊழிற்றாக, நின் செய்கை! விழவில்

கோடியர் நீர்மை போல முறைமுறை

ஆடுநர் கழியும் இவ் உலகத்து, கூடிய

நுகைப்புறன் ஆக நின் சுற்றம்

இசைப்புறன் ஆக நீ ஓம்பிய பொருளே”

என்ற இப்பாடலடிகள் விழாக் காலத்தில் கூத்தர் ஆடியதனை விளக்குகிறது (Swaminatha Iyer, 2014).

## போரில் பெருஞ்சோறு அளித்தல்

போர் தொடங்குவதற்கு முன்னர் வீரரை ஊக்குவிக்கும் பொருட்டு நிகழ்த்திய உண்பித்தலாகிய செயலை பெருஞ்சோற்று வழங்கும் நிலை என்பர். தொல்காப்பியர் புறத்திணை இயலில் வஞ்சித்திணையின் துறைகளுள் ஒன்றாகப் பெருஞ்சோற்று நிலையினைக் குறிக்கின்றனர்.

“இயங்குபடை அரவம் எரிபரந்து எடுத்தல்.

பிண்டமேய பெருஞ்சோற்று நிலையும்”

என்ற நூற்பாவின் போக்கில் பொருள்கொள்ளும் போது இப்பெருஞ்சோற்றுநிலை போருக்கு முன்னர் நிகழ்த்தப்படும் நிகழ்ச்சி எனலாம் (Sivalingan, 1995).

மன்னன் பந்து வடிவம் போன்று ஊனுடன் பெரிய சோற்றுத்திரளை பாணர்களுக்கு வழங்கினான் என்பதனை,

“மலரா மாலைப் பந்து கண்டன்ன

ஊன் சோற்று அமலை பாண் கடும்பு அருத்தும்”

என்ற பாடலடிகள் விளக்குகின்றன (Swaminatha Iyer, 2014). போர் முடியும் வரை இருபெரும் படைகட்கும் பெருஞ்சோறு வழங்கியதை புறம் எடுத்துரைக்கிறது என்கிறார் (Ramakrishnan, 2007).

“பெருஞ் சோற்று மிகு பதம் வரையாது கொடுத்தோய்”

என்ற பாடலடி போர்க்களத்தில் பெருஞ்சோறு வழங்கியதை உணர்த்துகிறது (Avvai Duraisamy Pillai, 1968).

## வீரம் தொடர்பான பழக்கவழக்கங்கள்

போரில் புண்பட்ட வீரனைக் காக்கும் பொருட்டு மனையிருப்பில் இரவமரத்தின் தழையையும், வேப்பிலையை சொருகுதலும், பேய்கள் புண்ணுற்றோனை வந்து தொடாதவாறு நறுமணப் பொருள்களை புகைத்தும் பாதுகாப்பது வழக்கமாகும் எனபதனை புறநானூறு பதிவு செய்துள்ளது.

தீங்கனி இரவமொடு வேம்பு மனைச் செரீ

நெடுநகர் வரைப்பில் கடி நறை புகை

காக்கம் வம்மோ

என்ற பாடலடிகள் இதனை விளக்குகின்றன (Avvai Duraisamy Pillai, 1968). மேலும், போர் செய்யத் தொடங்கும் முன் வேல் முதலான படைகலன்களை நீராட்டுவதனையும் பழக்கமாக கொண்டிருந்ததையும் அறியமுடிகிறது. குழந்தை இறந்து பிறந்தாலும் தசைப் பிண்டமாக வந்து பிறந்தாலும் அவற்றை வாளால் வடுப்படுத்தி அடக்கம் செய்யும் முறையினை பழக்கமாகக் கொண்டிருந்தனர் என்பதனை,

"குழவி இறப்பினும், ஊன்தடி பிறப்பினும்,

'ஆள் அன்று' என்று வாளின் தப்பார்"

என்று பாடல்வரிகளின் வழி அறியமுடிகிறது (Avvai Duraisamy Pillai, 1968).

## புலையனின் வழக்கம்

புலையன் ஒருவன் உப்பில்லாது சமைத்த சோற்றைக் கையில் கொண்டு நிலத்தையே கலனாக வைத்து இறந்தவர்க்கு படைப்பதனை பழக்கமாகக் கொண்டிருந்ததனை புறம் பதிவு செய்துள்ளது.

"உப்புஇலாஅ அவிப்புழுக்கல்

கைக்கொண்டு, பிறக்கு நோக்காது

இழிபிறப்பினோன் ஈயப்பெற்று"

என்று பாடலடிகளின் வழி உப்பின்றி வேக வைத்தச் சோற்றை இறந்தவர்க்குப் புலையன் பலியாக படைக்கும் வழக்கம் இருந்ததை அறியமுடிகிறது (Swaminatha Iyer, 2014). மேலும்,

"சுரம் பல வந்த எமக்கும் அருளி

வியல் மலர் அகன் பொழில் ஈமத் தாழி

அகலிதாக வனைமோ

என்ற பாடலடிகள் தன் கணவனோடு தானும் இறந்து கூடியிருக்கும்படி பெரிய பரப்பை உடைய முதுமக்கள்தாழியை செய்யுமாறு பெண்ணொருத்தி குயவனிடம் கேட்பதாக அமைந்துள்ளது (Swaminatha Iyer, 2014). இதன்வழி இறந்துபட்டவர் உடலைத் தாழியில் இட்டுப் புதைக்கும் பழக்கம் இருந்தது என்பது புலனாகிறது.

## போர்க்கானப் பழக்கவழக்கங்கள்

சங்க இலக்கியங்கள் காதல், போர், வீரம், கொடை, விருந்தோம்பல், ஆடவரின் நல்லொழுக்கங்கள், வீரவிளையாட்டுக்கள் முதலியவற்றை வெளிப்படுத்துகின்றன. இவ்வளவு விழுமியங்களை ஆராய்கின்ற பொழுது சங்ககால சமுதாய அமைப்பும் அதன் போர் நெறிமுறைகளும் பதிவு செய்யப்பட்டுள்ள தன்மையை அறியலாகின்றது."நாடு ஆளும் மன்னர் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறையை திருவள்ளுவர்,

"கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்

உடையானாம் வேந்தர்க் கொளி"

என்று எடுத்துரைக்கிறார் (Varadharasan, 2004). புறநானூறு சங்ககால போர் நெறிமுறைகளையும், கொடைச் சிறப்புகளையும் பெரிதும் விளக்கி நிற்பதாகும். போருக்கென்று சில நெறிமுறைகளையும் பழக்கவழக்கங்களாகப் பின்பற்றியுள்ளமையை அறியமுடிகின்றது.

## போர் அறம்

போரிடும் போது போரில் யார் யார் கலந்துகொள்ளவேண்டும் என்றும் யார் யார் கலந்துகொள்ளக் கூடாது என்றும் புறநானூறு எடுத்துரைக்கின்றது. இத்தகைய போர் அறத்தைப் போற்றியுள்ள பண்பை

"ஆவும், ஆன் இயற் பார்ப்பன மாக்களும்,

பெண்டிரும் பிணியுடையீரும், பேணித்

தென் புல வாழ்நர்க்கு அருங் கடன் இறுக்கும்

என்ற பாடலடி விளக்குகிறது. பசு, அந்தணர், பெண்கள், பிணியுடையோர் போன்றோர் போரில் கலந்துகொள்ளக் கூடாது என்பதை அறமாகக் கொண்டு விளங்குகிறது (Swaminatha Iyer, 2014).

## அரசுரிமை காரணமாக போர் செய்தல்

அரசனின் மண்ணாசையும், புகழ் வேட்கையும் போருக்குரிய காரணங்களாகச் சுட்டப்படுகின்றன. அரசுரிமை காரணமாகவும் போர்கள் நிகழ்ந்துள்ளன. இத்தகைய போர்கள் சேர, சோழ, பாண்டியர் மரபில் நிகந்தமைக்கு சங்கஇலக்கியத்தில் சான்று காணப்படவில்லை. நலங்கிள்ளியும் நெடுங்கிள்ளியும் அரசுரிமை காரணமாக போர் முயற்சியில் இறங்கிய போது புலவர்கள் வந்து சமாதானம் செய்தமை பற்றி புறநானூறு சுட்டுகிறது. மேலும் பெண் தர மறுத்த போதும் போர் நிகழ்ந்துள்ளது என்பதனை,

நுதிவேல் கொண்டு நுதல்வியர் துடையா

கடிய கூறும், வேந்தே தந்தையும்,

அணங்கு ஆயின், தான் பிறந்த ஊர்க்கே

என்ற பாடலடிகள் விளக்குகின்றன (Swaminatha Iyer, 2014).

## வஞ்சினம்

அரசர்களின் ஆழ்மனத்தில் உறைந்துக் கிடக்கும் எண்ணங்களே வஞ்சினமாக வெளிப்படுகிறது. வஞ்சினம் என்ற சொல் மறம், கடுஞ்சினம், கடும்வெறுப்பு, வெற்றி, போர், அழித்தல், பழி போன்ற பலவகைப் பொருட்களுடன் தொடர்புடையதாகும்.

மறத்தின் அதன் ஆற்றலில் வெளிப்படும் வெஞ்சினத்தின் அடிப்படையே வஞ்சினம் என்றும் கூறுவர். மேலும் இது இலக்கியத்தில் வெளிப்படும் தன்மையினை வைத்துச் 'சூளுரை' என்றும் குறிப்பிடுவர் (Sarathampal, 2010). தொல்காப்பியர் புறத்திணையியலில்,

"இன்னது பிழைப்பின் இதுவா கியரெனத்

துன்னருஞ் சிறப்பின் வஞ்சினத்தானும்"

என்று காஞ்சித்திணையின் துறைகளில் ஒன்றான வஞ்சினக் காஞ்சியை பற்றி குறிப்பிடுகிறார்.

போருக்குச் செல்லும் முன் வேந்தரும், வீரரும் வஞ்சினம் உரைத்தல் மரபு. பகைவரை வெல்வேன் என சபதம் செய்வேன் இல்லையெனில் புறங்காணோன் ஆயின், கொடுங்கோல் ஆட்சி செய்தவனாக ஆவேன் என்று வஞ்சினம் உரைக்கும் மறவன் பற்றி கூறப்படுகிறது.

"அவர் புறங்காணோன் ஆயின்- சிறந்த

பேர் அமர் உண்கண் இவளினும் பிரிக,

மெலிகோல் செய்தேன் ஆகுக"

என்ற பாடலடிகள் மன்னனின் வஞ்சினத்தை விளக்குகின்றன (Swaminatha Iyer, 2014).

மேலும் நெடுஞ்செழியன் என்னும் மன்னனை இளையன் என்று இகழ்ந்ததும் நகையாடியதும் அவன் பகைவரை ஒழிப்பேன் இல்லையென்றால் இரப்பார்க்கு ஈயும் பொருளின்றி போவேன் ஆகுக என்று கூறியதையும்,

"புலவர் பாடாது வரைக, என் நிலவரை
புரப்போர் புன்கண் கூர
இரப்போர்க்கு ஈயா இன்மை யான் உறவே"

என்ற பாடலடிகள் வழி அறியலாகின்றது (Swaminatha Iyer, 2014).

## நம்பிக்கைகள்

சமூகத்தின் பண்பாட்டு மரபினை அறிவிக்க வல்லன நம்பிக்கைகள். நம்பிக்கைகள் மக்களால் உருவாக்கப்பட்டுச் சமுதாயத்தில் பின்பற்றப்படுவன அவை சமூகத் தேவைகள் மற்றும் குறிக்கோள்களின் அடிப்படையில் தோன்றின. மனிதனின் தன்னல உணர்வும் சமுதாய உணர்வுமே நம்பிக்கைகளை வளர்த்து வருகின்றன எனலாம்.

## சொல்லும் பொருளும்

நம்பிக்கைகள் மக்களால் உருவாக்கப்படுவன .நம்பிக்கையினைச் சுட்டும் ஆங்கிலச்சொல்;(BeLief). இடைக்காலத்தில் பயிற்சி பெற்றதனை ஆங்கில அகராதிகள் தெரிவிக்கின்றன. தமிழில் இச்சொல் நம்பிக்கையினைக் குறிக்கப் பயன்பட்டுள்ளதனைச் சங்க இலக்கியங்கள் வழியாக அறியமுடிகிறது.நற்றிணையில் நம்பு என்ற வினைச்சொல் நம்பிக்கை என்ற பொருளில் ஆளப்பட்டு இருந்தமையும் அறியலாகின்றது. தொல்காப்பியத்தில் நம்பு என்ற சொல் விருப்பம் என்ற பொருளைக் குறிக்கிறது (Ilankumaranar, 2018).

"நம்பு மேவு நசையா கும்மே

என்ற நூற்பாவில் உரிச்சொல் அடியாகப் பிறந்த எச்சமாகக் காட்டப்படுகிறது (Tolkappiyar, 2007).

## இசை பற்றிய நம்பிக்கைகள்

சங்ககாலத்திலே இசைப் பாடல்கள் பல பாடப்பட்டிருந்தன. தமிழ் மக்கள் அக்காலத்தில் இன்னிசையில் மிகுந்த பயிற்சியும் மற்றும் விருப்பமும் உடையராய் இருந்தனர். அழகுக் கலைகளில் நான்காவது இசைக்கலை. இதனை இசைத்தமிழ் என்றும் கூறுவர் (Venkatasami Mayilai Seeni, 2009). யாழ், குழல் முதலிய இன்னிசைக் கருவிகளை பயன்படுத்தி பேயை ஓட்ட இயலும் என்ற நம்பிக்கை மக்களிடம் இருந்தது.

வீரன் ஒருவன் போர்க்களத்திலே மார்பில் புண்பட்டு இறக்கிறான். அப்புண்ணை உண்ணவரும் பேய்களைத் தடுக்கும் என கருதி காஞ்சிப் பண்ணைப் பாடி யாழையும், குழலையும் இயங்குவோம் என்று தலைவி தோழியை அழைப்பது போன்றமைந்த பாட்டொன்று புறநானூற்றில் காணப்படுகிறது.

இசைமணி எறிந்து காஞ்சிப்பாடி

பெருநகர் வரைப்பிற் கடி நறை புகைஇக்

என்ற பாடலடிகள்வழி யாழ், குழல் முதலிய இன்னிசைக் கருவிகளால் மக்கள் இன்பம் துய்த்ததேயின்றி, பேய் பிசாசுகளை இசையால் ஓட்டவும் முடியும் என்று நம்பிக்கை கொண்டிருந்ததை அறியமுடிகிறது (Swaminatha Iyer, 2014).

## நிமித்தம் பார்த்தல்

நிமித்தம் என்பது வாழ்வில் பின் நிகழவிருக்கும் நன்மை, தீமைகளைச் சில குறியீடுகளின் வாயிலாக முன்னுணர்த்துவதாகும். இதனை இன்று சகுனம் எனக் குறிப்பிடுகிறோம். இயக்குவோரின்றி இயல்பாக ஏற்படுகின்ற இயற்கையின் அறிகுறிகள் மற்றும் அடையாளங்கள் சகுனம் அல்லது நிமித்தம் எனப்படுகின்றன (Ayyanar, 2007). நிமித்தங்கள் நம்பிக்கையின் பாற்பட்டன. நம் செயல்களுக்கும் நம் வயப்படாத இயற்கையின் நிகழ்வுகளுக்கும் தொடர்பு காட்டுவது நிமித்தங்களின் செயற்பாடாகும்.

## விரிச்சி கேட்டல்

ஒரு செயலைத் தொடங்குவதற்கு முன்னர்ப் பிறர்கூறும் சொற்களைச் சகுனமாகக் கொள்ளும் வழக்கம் பண்டுதொட்டே நம்மிடையே நிலவுகின்றது. இதனைப் பண்டைய தமிழ்மக்கள் விரிச்சி எனச் சுட்டியுள்ளனர். நெல்லையும் நீரையும் சொரிந்து விரிச்சி கேட்கும் பழக்கம் இருந்துள்ளது.

“நெல்நீர் எறிந்து விரிச்சி ஓர்க்கும்

செம்முது பெண்டின் சொல்லும் நிரம்பா”

என்ற பாடலடிகள் விரிச்சி கேட்ட தன்மையை விளக்கி நிற்கின்றன (Swaminatha Iyer, 2014).

## நல்லநாள் பார்த்தல்

சங்ககால மக்கள் தங்களுடைய வாழ்க்கையில் சில நம்பிக்கைகளைப் பின்பற்றினர். இரவலர் மன்னனை நாடிப் புறப்படும் போது நல்லநாள் பார்த்தலும், புள் நமித்தம் காண்பதும் வழக்காகும்.

“நாள் அன்று போகி புள் இடை தட்ப

பதன் அன்று புக்கு திறன் அன்று மொழியினும்”

என்ற பாடலடிகள் நாள் மற்றும் புள்ளின் நிமித்தமும் நன்னிமித்தமாக இல்லையென்றால் பெற கருதும் பரிசில் பயணம் வெற்றி அடையாது என்ற நம்பிக்கை வெளிப்படுத்துகின்றன (Swaminatha Iyer, 2014). மேலும் தீய அறிகுறிகளால் மன நடுக்கமுறுவதை,

“புதுப் புள் வரினும் பழம் புள் போகினும்

விதுப்புறவு அறியா ஏமக் காப்பினை”

என்ற பாடலடிகள் விளக்குகின்றன (Swaminatha Iyer, 2014). புதிய பறவை வந்தாலும் பழைய பறவை அவ்விடம் விட்டு அகன்றாலும், அத்தகைய தீய அறிகுறிகளால் மனநடுக்கமுற்று கவலையடைவதாக இப்பாடல் அமைந்துள்ளது..

## உன்னமரம் பார்த்தல்

உன்னம் என்பது ஒருவகை மரமாகும். இம்மரம் நிமித்தம் காண்பதற்கு வெற்றி எய்துவதாயின் தழைத்தும், தோல்வி ஏற்படுமாயின் காய்ந்து பின்விளைவினை முன்னுணர்த்துவதாகக் கருதுவர். உன்னமரம் தீ நிமித்தம் உணர்த்தியும் வாழியாதன் அஞ்சாது சென்று போரில் வெற்றி பெற்றான். அதனால் இவனை உன்னத்துப் பகைவன் என்றும் கூறுவர்.

“வேண்டிடத் தடூஉம் வெல்போர் வேந்தே

திசையிரு நான்கு முற்க முற்கவும்

பெருமரத்து இலையில் நெடுங்கோடு வற்றல் பற்றவும்

வெங்கதிர்க் கனலி துற்றவும் பிறவும்”

என்ற பாடலடிகள் உன்னமரம் நிமித்தம் உணர்த்தியதை விளக்குகின்றன (Swaminatha Iyer, 2014).

## பேய்மகளிர் பற்றிய நம்பிக்கைகள்

சங்க இலக்கியத்தில் அச்சம் தரக்கூடிய கூறுகளாகப் பேய், பூதம் போன்ற மீவியல்பு சக்திகள் மனித வாழ்வியலோடு இணைத்து பேசப்பட்டிருக்கின்றன. இவற்றில் பேய் என்ற சக்தி பிற மீவியல்பு ஆற்றல்களை விட அதிகமாக இலக்கியத்தில் இடம் பெற்றிருக்கக் காணமுடிகிறது. இப்பேய் அச்சந்தரக்கூடிய உருவையும் அச்சத்திற்கு அடிப்படையான இடங்களையுமே உறைவிடமாக கொண்டிருந்ததனை

“களிற்றுக் கோட்டன்ன வால்எயிறு அழுத்தி

விழுக்கொடு விரைஇய வெண்நிணச் சுவையினள்.

உருகெழு பேய்மகள் அயர

குருதித்துகள் ஆடிய களம்கிழ வோயே"

என்ற பாடலடிகள் விளக்குகின்றன (Swaminatha Iyer, 2014). அச்சம் பொருந்திய பேய்மகள் பாடிக் குரவைக் கூத்து ஆட குருதி உலர்ந்த துகள் பட்ட போர்க் களத்தை உரிமையாக்கிக் கொண்டதனை இப்பாடலடிகள் உணர்த்துகின்றன.

## பேய் கூத்தாடுதல்

போர்க்களத்தில் பேய்மகள் தன்னுடைய அழுகுரலை எடுத்துப்பாடிக் கூத்தாடுவதனைபுறநானூறு பதிவு செய்துள்ளது.

"வடிநவில் எஃகம் பாய்ந்தென கிடந்த

தோடிஉடைத் தடக்கை ஓச்சி வெருவார்

அழுகுரற் பேய்மகள் அயர கழுகொடு

செஞ்செவி எருவை திரிதரும்

அஞ்சுவரு கிடக்கைய களம்கிழவோயே"

என்ற பாடலடிகள் இதனை எடுத்துரைக்கின்றன (Swaminatha Iyer, 2014).

## பேய்க்குக் கூழிடுதல்

போர் மரபில் வஞ்சினம் செய்வோர் களவேள்வி செய்து பகைவர் குருதியைப் பேய்க்கு ஊட்டுவதாகக் கூறும் நிலையினை பலபாடல்கள் எடுத்துக் காட்டுகின்றன.

"கணைத்துளி பொழிந்த கண்கூடு பாசறை

பொருந்தாத் தெவ்வர் அரிந்ததலை அடுப்பின்

கூவிள விறகின் ஆக்குவரி நுடங்கல்

முர்மறி பிண்டம் வாலுவன் ஏந்த"

என்ற பாடலடிகள் பேய்க்குக் கூழடுவதனை விளக்குகின்றன (Swaminatha Iyer, 2014).

"கலிங்கத்துப் பரணியிலும் பேய்கள் காளிக்கு கூழிட்டுப் படைத்து வழிப்பட்டதனை ஜெயங்கொண்டார் "கூழ் அடுதல்" என்பதில் குறிப்பிடுகிறார். களம் அடையக் காட்டுதற்கு முடிவ தன்று

"கவிழும் மதக்கரி சொரியக் குமிழி விட்டுக்

குளம் மடைபட்டது போலும் குருதி ஆடிக்

கூழடுமின் என்றருளக் கும்பிட்டு ஆங்கே"

இப்பாடல்க் கூழடுதல் பற்றி எடுத்துரைக்கிறது (Saravanan, 2013).

## காவன் முரசு

காவன் முரசு அரசராலும், மக்களாலும் சிறப்பாகப் போற்றிக் காக்கப்படுவதாகும். இதனை பூசனையோடு வழிப்பட்டுப் பாதுகாத்து வருவது மன்னனது கடமையாகும். இம்முரசுக்கு துன்பம் ஏற்படின் மன்னனுக்குத் துன்பம் தொடரும் என்பது அன்றைய நம்பிக்கையாகும். இக்காவன் முரசின் சிறப்பினை

"குருதி வேட்கை யுருகெழு முரசம்

மண்ணி வாரா வளவை யெண்ணெய்

நுரைமுகந் தன்ன மென்பூஞ் சேக்கை

வீசியோயே"

என்ற பாடலடிகள் எடுத்துரைக்கின்றன (Avvai Duraisamy Pillai, 1968). காவன் முரசு கண் கிழிந்து உருளுதல் தீமையின் அறிகுறியாகக் கருதப்பட்டுள்ளது. இதனை,

"மைந்துடை யானை கைவைத் துறங்கவும்

திண்பிணி முரசங் கண்கிழிந் துருளவும்

மேலோ ருலக மெய்தின னாகலின்"

என்ற பாடலடிகள் வழி அறியலாகின்றது (Avvai Duraisamy Pillai, 1968).

## முடிவுரை

பழக்கம் என்பது ஒரு கற்கும் செயலாகும். இது தனிமனிதனிடம் இயல்பாக வந்தமைந்த நடத்தையைக் குறிப்பதாகும். பழக்கம் வளர்ச்சிக்கு இன்றியமையாத கூறாகக் கருதப்படுகிறது. பழக்கத்தின் வளர்ச்சி நிலையினை 'வழக்கம்' என்பர். பின்னர் நாளடைவில் இரண்டையும் சேர்த்து பழக்கவழக்கங்கள் என்று அழைக்கப்படுகிறது. புறநானூற்றுப் பாடலிலும் பழக்கவழக்கங்கள் உள்ளதை அறியமுடிகிறது. விழா நாளில் மக்கள் தொழிலாற்றுவதில்லை என்பதும் விழாநாளில் மன்னர் சிறைப்பட்ட கைதிகளை விடுவிப்பதும் மற்றும் இரவலர்க்கு பரிசளித்தலை வழக்கமாகக் கொண்டிருந்தமையையும் புறநானூறு விளக்குவதனை அறியலாகின்றது. போர் தொடங்குவதற்கு முன்னர் வீரரை ஊக்குவிக்கும் பொருட்டு பெருஞ்சோறு வழங்கியுள்ளனர். போரில் புண்பட்ட வீரனைக் காக்கும் பொருட்டு மனையிருப்பில் இரவமரத்தின் தழை, வேப்பிலையையும் செருகுதலும், பேய்கள் புண்ணுற்றோனை வந்து தொடாதவாறு நறுமணப் பொருள்களை புகைத்தும் பாதுகாப்பதும் வழக்கமாக இருந்துள்ளது என்பதனை அறியமுடிகின்றது. போருக்கென்று சில நெறிமுறைகளை பழக்கவழக்கங்களாகப் பின்பற்றியுள்ளனர். உன்னம் என்பது ஒருவகை மரமாகும். இம்மரம் நிமித்தங் காண்பதற்கு வெற்றி எய்துவதாயின் தழைத்தும், தோல்வியுறுவதாலின் காய்ந்து பின்விளைவினை முன்னுணர்த்துவதாகக் கருதியமையை அறியலாகின்றது. காவன் முரசு அரசராலும், மக்களாலும் சிறப்பாகப் போற்றிக் காக்கப்பட்டதனை அறியலாகின்றது. இம்முரசுக்கு ஊறு ஏற்படின் மன்னனுக்குத் துன்பம் தொடரும் என்ற நம்பிக்கை நிலவியமையைக் காணலாகின்றது.

## References


Avvai Duraisamy Pillai, Su., (1968) Purananuru, Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam, Chennai, India.

Ayyanar, V., (2007) Tamilargalin sagunangal matrum kanavugal, Omens and Dreams of Tamils - School of Performing Arts, Madurai Kamaraj University Madurai, India.

Gandhi, K., (2003) Tamilar palakavalangalum nambikaikalum, World Tamil Research Institute, Chennai, India.

Ilampuranar, (1971) Tolkappiyam Porulathikaram, Kazhaga veliyedu, Chennai, India.

Ilankumaranar, U.A., (2018) Tolkappiyam – Thelivurai, Fourth Tamil Sangam, Madurai, India.

Ramakrishnan, A., (2007) Tamilaga varalarum tamilar panpadum, Madurai, India.

Sarathampal, S., (2010) Ilakkiyamum Ulaviyalum, New century book house (P) Ltd, Chennai, India.

Saravanan, P., (2013) Kalingattuparani, Sandhya Publications, Chennai, India.

Sivalingan, A., (1995) Tolkappiyam-Porulatikaram uraivalam, International Institute of Tamil Studies, Chennai, India.

Swaminatha Iyer, U.V., (2014), Purananooru Moolamum Uraiyum, U.Ve.Sa, Noolaga nilayam, Chennai, India.

Tolkappiyar, (2007), Tolkappiyam Sollathikaram, Saraswathi Mahal Library, Tanjore, India.

Varadharasan, Mu., (2004) Thirukkural Thelivurai, The South India Saiva Siddhantha Works Publishing Society, Tinnevelly, India.

Venkatasami Mayilai Seeni., (2009) Tamilar valartha alagu kalaigal, Pavai Publications Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License